Department of



# குடும்பங்களுக்கான அறிவிப்புகள்

## மேற்கு ஆஸ்திரேலியாவில் அரசுப் பள்ளியில் பயிலும் தற்காலிகத் திறன் குறைபாடு (டிஎஸ்எஸ் (TSS)) விசா (துணைவகுப்பு 482) மற்றும் தற்காலிக வேலை (திறன்) விசா (துணை வகுப்பு 457) உடையவர்களின் குழந்தைகளுக்கான பள்ளிக் கட்டணம்.

உள்நாட்டில் வசிக்கும் மேற்கத்திய ஆஸ்திரேலியக் குழந்தைகளுக்குக் கிடைக்கும் அதே அங்கீகாரம் 457 அல்லது 482 விசா உடையவர்களின் குழந்தைகளுக்கும் உள்நாட்டில் உள்ள அரசுப் பள்ளியில் கிடைக்கும் என்பதால் அவர்கள் அங்கேயே பயிலலாம். நீங்கள் குடும்பப் பள்ளிக் கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதுமானது ஆகும்.

### பள்ளிக் கட்டணம் மற்றும் பள்ளிக்கு அளிக்கும் தன்னார்வப் பங்களிப்பு மற்றும் இதர கட்டணங்கள்

அரசுப் பள்ளிகளில் நீங்கள் பதிவு செய்திருந்தால், குடும்பத்தில் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொள்ளாமல் ((முன் மழலையர் பள்ளி முதல் 12 வயது வரை ), பயிற்சிக் கட்டணம் வருடத்திற்கு $4000 ஆகும். தங்களது மூத்த குழந்தையை ஏற்கனவே சேர்ப்பித்துள்ள குடும்பங்கள் கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை. பள்ளிக்கு அளிக்கும் தன்னார்வப் பங்களிப்புகள் மற்றும் இதர கட்டணங்களை குழந்தைகளின் பள்ளியிலேயே நேரடியாகச் செலுத்த வேண்டும். இந்தக் கட்டணங்களை, பள்ளியில் பயிலும் ஒவ்வொரு பிள்ளைகளின் குடும்பங்களும் செலுத்த வேண்டும். மேலும் அதை வருடந்தோறும் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் செலுத்தப்பட வேண்டும்..

### பள்ளிக் கட்டணத்தைச் செலுத்துதல்

பயிற்சிக் கட்டணமானது டிஏஎ்ப்ஈ (TAFE) இன்டர்நேஷனல் மேற்கு ஆஸ்திரேலியாவுக்குச் செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் (அல்லது நீங்கள் உங்கள் குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும்போது ) $4000 (அல்லது ப்ரோ ரேட்டாக) கடிதம் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ ஒரு கட்டணப் பரிந்துரையை பெறுவீர்கள்.

பள்ளிக் கட்டணத்தைக் ஒரே தவணையாகவோ அல்லது நேரடி டெபிட் வழியாகப் பலத் தவணைகளாகவோ இன்வாய்ஸ்ஸில் குறிப்பிட்டுள்ளத் தொகையை அந்த ஆண்டின் இறுதிக்குள் செலுத்தி முடிக்கப்பட வேண்டும்.

செலுத்தப்படாத அல்லது நிலுவையிலுள்ள முந்தைய ஆண்டுகளுக்கான பள்ளிக் கட்டணங்கள் 2020க்கான கட்டணத்துடன் சேர்த்துக் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

### பள்ளிக் கட்டணம் செலுத்தத் தேவை இல்லாத சூழ்நிலைகள்:

பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் பள்ளிக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை:

> நிரந்தரக் குடியுரிமை பெற்றால்;

> உங்கள் குழந்தைகள் அரசுப் பள்ளிக் கல்வி முறையில் இருந்து வெளியேறினால்; அல்லது

> உங்களது விசா வகை 457 அல்லது 482 விசா வகையில் இருந்து மாறினால்.

உங்களது சூழ்நிலையில் இவற்றில் ஏதேனும் நிகழ்ந்தால், உங்கள் பிள்ளைகளின் பள்ளிகளுக்கு நீங்கள் உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும். அது உங்களுக்கு உரிய பள்ளிக் கட்டணப் பரிந்துரைகளை வழங்கப்படுவதையும் நீங்கள் தகுதிபெறும் ஏதேனும் ரீ்பண்டுகளைப் பெறுவதையும் இது உறுதிப்படுத்தும்.

முன்னதாக நீங்கள் 457 அல்லது 482 விசாவில் வசித்திருந்தீர்கள், ஆனால் இப்போது பிரிட்ஜிங் விசாவில் இருக்கிறீர்கள் என்றாலும் நீங்கள் பள்ளிக் கட்டணத்தைத் தொடர்ந்து செலுத்த வேண்டும். உங்களின் நிலையான 457 அல்லது 482 விசாவின் கீழ் நீங்கள் கட்டுப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும், உரிமை வழங்கல்களையும் பிரிட்ஜிங் விசா மாற்றாது.

## நிதி நெருக்கடிக்கான சலுகை

நீங்கள் 457 அல்லது 482 விசா வைத்திருப்பவராக இருந்தால், நீங்கள் செலுத்தும் பள்ளிக் கட்டணத்தைக் குறைப்பதற்கு அல்லது அதிலிருந்து விலக்களிப்பதற்கு, நிதி நெருக்கடிக்கான சலுகையைக் கோரி விண்ணப்பிக்கலாம். கட்டணம் விதிக்கப்படும் அந்த வருடமே நிதி நெருக்கடிக்கான சலுகைக்கு விண்ணப்பித்திருக்க வேண்டும். 2019க்கு முந்தைய பள்ளிக் கட்டணங்களுக்கான நிதி நெருக்கடி சலுகைக்கு இதற்கு மேல் விண்ணப்பிக்க முடியாது.

நிதி நெருக்கடிக்கான சலுகை விண்ணப்பங்கள் இரு வகைப்படும்:

**ஒட்டுமொத்த குடும்ப வருமானம்**

வரி மற்றும் இதர கட்டணங்கள் விதிக்கப்படுவதற்கு முன், பெற்றோர் இருவராலும் ஈட்டப்படும் வரிவிதிப்பிற்கு உட்பட்ட வருவாயே ஒட்டுமொத்த குடும்ப வருமானம் ஆகும். அதிக நேரம் பணிபுரிந்ததற்கான வருவாய் அல்லது போனஸ் கட்டணங்களும் இதில் சேர்க்கப்படும்.

உங்கள் குடும்பத்தின் ஒட்டுமொத்த குடும்ப வருமானம் வருடத்திற்கு $75000 அல்லது அதற்குக் குறைவானதாக இருந்தால், பள்ளிக் கட்டணத்தின் மீது முழு விலக்கு உங்களுக்கு வழங்கப்படலாம். உங்கள் ஒட்டுமொத்த குடும்ப வருமானம் கணக்கிடப்படுவதற்கு அதை அனுமதிக்கும் சான்று தேவைப்படுகிறது. உங்கள் மற்றும் உங்கள் வாழ்க்கைத்துணையின் சான்றுகளாக அளிக்கப்பட வேண்டியவை:

> மிகச் சமீபத்திய பேஸ்லிப்கள் மூன்று;

> வருட வருமானத்திற்கான சான்று;

> பேஜி (PAYG) அல்லது குழு சான்றிதழ்களில் உள்ள வருமானம்; மற்றும்

> 457 அல்லது 482 விசா வழங்கப்படதற்கான அறிவிப்பு அல்லது உத்தரமாதமளிக்கப்பட்ட வருமானத்துடனான பணி ஒப்பந்தம்.

**எதிர்பாராத நிதி நெருக்கடி நிலைகள்**

உங்களின் நிதிநிலைகளில் ஏற்பட்ட எதிர்பாராத நெருக்கடியினால், முழு பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த இயலாத நிலை ஏற்படுமானால், பள்ளிக் கட்டணத்தில் உங்களுக்கு முழு அல்லது பகுதி விலக்கு வழங்கப்படலாம். அவ்வாறான எதிர்பாராத நெருக்கடிக்கான சான்றையும் அது எவ்வாறு பயிற்சிக் கட்டணம் செலுத்துவதில் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், சம்பவம் நடந்த 6 மாதத்திற்குள் நீங்கள் வழங்க வேண்டும்.

உடல்நலக் குறைபாடு, வேலையிழப்பு, பணிமாற்ற நிலைகள், குடும்பப் பிரச்சனை, இறப்பு ஆகியவற்றை இந்த நிதிநிலைகளின் எதிர்பாராத மாற்றம் உள்ளடக்கும்..

பின்வரும் சூழ்நிலைகளை எதிர்பாராத மாற்றங்களாகக் கருத்தில்கொள்ள முடியாது:

> இந்தப் பள்ளிக் கட்டணத்தையோ வேறு ஏதேனும் கல்விக் கட்டணத்தையோ செலுத்தும் கட்டாயம்:

> நிரந்தர இருப்பிடத்திற்கு விண்ணப்பிப்பது;

> வாடகை, ஹெல்த் இன்சூரன்ஸ், லோன் திருப்பி செலுத்துதல் போன்ற குடும்பத்திற்கான தினசரி செலவுகள்; அல்லது

> வேறு குழந்தைகள் அல்லது வளர்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணங்கள் செலுத்துவது.

உங்கள் பணியில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் நீங்கள் விண்ணப்பிக்கும் நிதி நெருக்கடிக்கான சலுகையைப் பாதிக்கலாம். நீங்கள் செய்யும் பணியில் இருந்து உங்களுக்கும் உங்களது வாழ்கைத்துணைக்கும் கிடைக்கும் ஒட்டுமொத்த வருமான விவரங்களையும் வழங்கிட வேண்டும். பணிமுடிவு அல்லது மிகைமை கடிதங்கள், பணியிலிருந்து கிடைக்கும் இறுதியாகப் பெற்ற பேஸ்லிப்கள் அல்லது நீங்களோ உங்கள் வாழ்கைத்துணையோ எவ்வளவு காலமாக வேலையில்லாமல் இருக்கிறீர்கள் என்ற விவரங்களையும் வழங்க வேண்டும்.

அனைத்து நிதி நெருக்கடிக்கான சலுகை விண்ணப்பங்களும் ஒவ்வொன்றாய் காரணங்களின் அடிப்படையில் பரிசீலனைக்குக் கொள்ளப்படுகின்றன. டிஏஎஃப்ஈ (TAFE) இன்டர்நேஷனல் மேற்கு ஆஸ்திரேலியாவிடம் நீங்கள் அனைத்துத் தேவையான ஆவணங்களையும் சமர்ப்பித்த நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள் அதன் முடிவைத் தெரிந்து கொள்ளலாம்.

**ஒவ்வொரு வருடமும் நிதி நெருக்கடிக்கான சலுகை விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பள்ளிக் கட்டணத்திற்கான விலக்கு அளிக்கப்பட்டால், உங்களால் கட்டணம் செலுத்த முடியாமல் போன அந்த காலகட்டத்திற்கு மட்டுமே அது பொருந்தும். அடுத்த கல்வியாண்டிற்கும் கல்விக் கட்டணத்திற்கான விலக்கு தொடராது.**

